©
GOVERNMENT OF TAMIL NADU
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 40A] சென்னை, வியாழக்கிழமை, பிப்ரவரி 18, 2016
மாசி 6, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு-2047

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2016—ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2016.**

**1955—ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடுச் சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1. (1)** இந்தச் சட்டம், 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

**(2)** மாநில அரசு அறிவிக்கையினால் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் XIV/1955.

74—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான 1955—ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடுச் சட்டத்தின் 74—ஆம் பிரிவில் ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக ‘‘முத்திரைத்தாள்கள்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘முத்திரைத்தாள்கள் அல்லது மின்னணு—முத்திரைத்தாள்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

75—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 75—ஆம் பிரிவில் ‘‘அல்லது பகுதி அளவில் பதிவு செய்யப்படுதலோ மற்றும் பகுதி அளவில் பசை நாடா ஒட்டுதல்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பின்பு ‘‘அல்லது மின்னணு—முத்திரைத்தாள்’’ என்ற சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்.

**நோக்க–காரண விளக்கவுரை**

**1955–**ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XIV/1955) **75–**ஆம் பிரிவின்படி, மேற்சொன்ன சட்டத்தின்படி விதிக்கத்தக்க கட்டணத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் முத்திரைத்தாள்கள் பதிவு செய்யப்படுதலோ அல்லது பசைநாடா ஒட்டப்படுதலோ அல்லது பகுதியளவில் பதிவு செய்யப்படுதலோ அல்லது பகுதியளவில் பசைநாடா ஒட்டப்படுதலோ வேண்டும். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் தனது **2013**, மார்ச்சு **13–**ஆம் தேதியிடப்பட்ட CSD எண்.**26814/2012–**ல் A.எண்.**1226/2013–**ல் உள்ள தனது ஆணையில் உள்ள அதன் கருத்துரைகளின் அடிப்படையில், சென்னை உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு விதிக் குழுவானது, நீதிமன்றக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு மின்னணு முத்திரைத்தாளையும் கூட பயன்படுத்த முடிவுசெய்திருக்கிறது. அதன் காரணமாக சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமைப் பதிவாளர் மின்னணு முத்திரைதாள்கள் மூலமாகவும் கூட நீதிமன்றக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு வகைசெய்யும் பொருட்டு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் XIV/1955-என்ற சட்டத்தின் **74** மற்றும் **75** ஆகிய பிரிவுகளைத் திருத்தம் செய்யுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. அதற்கிணங்க மேற்சொன்ன நோக்கத்திற்காக மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் XIV/1955-என்ற சட்டத்தைப் பொருந்தத்தக்க வகையில் திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்திருக்கிறது.

**2.** இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி,*
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.